[1981 பிப்ரவரி 7

கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம்

*வினா எண். 229—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கோடியக் காட்டில் வன் விலங்கு சரணாலயமும் பறவைகள் சரணாலயமும் ஒரே இடத்தில் இருப்பதால் அதை மேம்படுத்துவதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம், கோடியக்கரையில் வன விலங்கு சரணாலயத்தை மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய அரசுபலவகை எண். 1189, வன மீனளத் துறை, நாள் 14–12–1977ல் ரூ. 3,57,000 அனுமதி வழங்கியுள்ளது. மேலும் இச் சரணாலயத்தை மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் அபிவிருத்திச் செய்ய ரூ. 5,76,000 ஒப்புதலளிக்க மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, கோடியக்கரை வன விலங்கு சரணாலயம், பறவைகள் சரணாலயம் இரண்டும் ஒரே இடத்தில் இருக்கின்றன. ஆனால் அது பற்றி அதிகமாக விளம்பரம் செய்யப்படவில்லை. அதனால் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதில்லை. ஆகவே, அதிகமாக விளம்பரம் செய்து இன்னும் அதிகமாக சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினரின் யோசனையைப் பரிசீலிக்க அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.